அப்பாற்பட்டு அனைத்துத் தரப்பு மக்களின் அன்பையும் பாசத்தையும் பெற்றவரும், அரசியல் நாகரிகத்தோடும், கண்ணியம் மிகுந்த பண்பாட்டோடும் அனைவரிடமும் நெருக்கமாகப் பழகக்கூடிய நல்லியல்பு கொண்டவரும், மக்கள் பாராட்டிப் போற்றும்வண்ணம் பொதுப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு சீரிய முறையில் பணியாற்றியவரும், சிறுவயது முதல் காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு உயரிய தொண்டாற்றியவரும், 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும், பூந்தமல்லி தொகுதியிலிருந்தும், 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை திருவள்ளூர் தொகுதியிலிருந்தும், மீண்டும் 2006 ஆம் ஆண்டு முதல் பூந்தமல்லி தொகுதியிலிருந்தும் தொடர்ந்து நான்கு முறை தமிழக சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. டி. சுதர்சனம் அவர்கள், 26–6–2010 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரது மறைவால அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. எஸ். ஜெயபால், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

"கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இளமைப் பருவம் முதல் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தவரும், மக்கள் பாராட்டும் வகையில் சிறப்பான முறையில் பணியாற்றியவரும், இனிய பண்புகளைக் கொண்டவரும், அனைவரிடமும் அன்பாகப் பழகக்கூடியவரும், அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. எஸ். ஜெயபால் அவர்கள், 25–7–2010 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

2010 நவம்பர் 8] [பேரவைத் தலைவர்]

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (9–11–2010) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 9–39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*****

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS